மாலைச்சுடர்

சென்னை 2.2.2010

# ஸ்ரீராமச்சந்திரா பல்கலையில் மகப்பேறு பயிலரங்கம்

சென்னை,பிப்.2:

நாடெங்கிலிருந்தும், நேபாளத்தி லிருந்தும் 400க்கும் மேற்பட்ட மகப்பேறு மருத்துவத்துறை பட்ட மேற்படிப்பு மாணவர்கள் போரூர் ஸ்ரீராமச்சந்திரா பல்கலையில் துவங்கிய ஒருவார திறமை மேம்பாட்டு பயிலரங்கத்தில் பங்கு பெற்றனர்.

அப்போது பேசிய ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ கல்லூரி மகப்பேறு மருத்துவத் துறையின் முதல் தலைவரும், விஜயாகல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளையின் இயக்குனருமான பேராசிரியர் சாவித்ரி சுப்பிரமணியம் கூறுகையில், நல்ல பாட அறிவும், மருத்துவமனையில் செய்த அரும்பணியும், பழகும் விதமும், நோயாளிகளுக்கு கனிவான சேவையும் செய்தால் மாணவர்கள் சிறப்பாக தேர்ச்சி பெறுவதோடு நல்ல மருத்துவராகவும் விளங்க முடியும் என்று கூறினார்.

நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசிய மகப்பேறு நுண்துளை அறுவை சிகிச்சை நிபுணரும் ஜோசப் நர்சிங் ஹோமின் இயக்குனருமான பேராசிரியர் ஏ.சூரியன் ஜோசப் கூறுகையில், நல்ல பண்புகளும் நோயாளிகளுக்கு மருத்துவ சேவை செய்வதில் உயர் தரத்தை தொடர்ந்து பேணுவதுமே, பட்ட மேற்படிப்பு மகப்பேறு நலத்துறை மாணவர்களின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.